# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 55 — 1973 අප්‍රේල් 11 වැනි බදාදා — 1973.04.11

55 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 363 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 375 |


## பதவிகள்—வெற்றிடம்

### " ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்காக நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

### முக்கிய அறிவித்தல்

***ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.***

*எல். டபிள்யூ. பி. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிருபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும், தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமனக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பன வற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

எனது எண் : ஓ.எம்./4/1/124

வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகமொன்றில் வெற்றிடம்

சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியத்திலுள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் இலங்கைக் கடல்கடந்த சேவையின் "இ" வகுப்பிற் பதவி

இலங்கைக் குடியரசின் அரசுச் சேவையிலுள்ள அலுவலக ஊழியர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களிடமிருந்து, சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியத்திலுள் மொஸ்கோவிலிருக்கும் இலங்கைத் தூதுவராலயத்தில், இலங்கைக் கடல்கடந்த சேவையின் "இ" வகுப்பைச் சேர்ந்த (தாய்நாட்டு அடிப்படையிலமைந்த) காவலாள் பதவியொன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் தற்போது நிரந்தர, இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகள் வகிப்போராகவும் தத்தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளோருமாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 1973, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று 45 (நாற்பத்தைந்து) வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

மோட்டார் கார்கள் யாவற்றுக்குமான சாரத்திய உத்தரவுச் சீட்டொன்றை வைத்திருப்போரும் மோட்டார் ஊர்திகளைச் சாரத்தியஞ் செய்தலில் செய்முறை அனுபவம் உடையோருமான விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பெறும்.

அலுவலக ஊழியர் சேவைப் பிரமாணக்குறிப்பின் 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலக ஊழியர் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த பதவிகளுக்குரிய கடமைகள் எவற்றையேனும் புரிதற்கு, இப்பதவிக்கெனத் தெரிவுசெய்யப் பெறுபவர், ஆளாவர்.

2. இப்பதவிக்கெனத் தெரிவுசெய்யப் பெறுபவர் ஒரு மூன்றாண்டு காலவெல்லையொன்றுக்குக் கடல்கடந்த சேவையாற்றுமாறு வேண்டப்படுவர். அவர் தமது நிலையான அடிப்படைச் சம்பளத்தைத் தொடர்ந்தும் பெறுவதோடு, அத்துடன், மேலதிகமாக கடல்கடந்த சேவைப் பிரமாணக்குறிப்பின் நியதிகளுக்கியைய மேலதிக சேவைப் படியொன்றையும் ஆடையணிப்படியொன்றையும் கொடுபடக் கடவர்.

3. இப்பதவிக்குத் தெரிவுசெய்யப் பெறுபவர் கடல்கடந்த சேவைக்கு ஏற்ற தமது உடற்றகுதிதொடர்பிலான ஒரு வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுமாறு வேண்டப்படுவர்.

4. இதற்குரிய அட்டவணையிலுள்ள படிவ உருவிலமைந்த விண்ணப்பங்களானவை, விண்ணப்பதாரியின் திணைக்களத் தலைவருக்கு ஊடாக, செயலாளர், பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, குடியரசுக் கட்டடம், கொழும்பு—1 என்னும் முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்திற் கொடுபட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும், விண்ணப்பதாரரானவர் தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, நிரந்தர, இளைப்பாற்றிச் சம்பளம் பெறற்பாலரான ஓர் அலுவலர் எனவும் திணைக்களத் தலைவர் சான்றுபடுத்துதல் வேண்டும். அத்திணைக்களத் தலைவர், விண்ணப்பதாரரின் வெளிநாட்டுக்குரிய சேவைக்கு ஏற்ற தன்மை பற்றிய ஒரு விதந்துரையுடன், தெரிவுசெய்யப்பெறும் பட்சத்தில் விண்ணப்பதாரர் அன்னாரது தற்போதைய நியமனத்திலிருந்து விடுவிக்கப்படக்கூடுமா என்பதையும் குறிப்பாக உணர்த்துதல் வேண்டும்.

5. இவ்வமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பெற்ற முன்னைய விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்பெறா.

6. விண்ணப்பங்களானவை 1973, ஏப்பிரல் 30 அன்று அல்லது அதற்குமுன் இவ்வமைச்சை வந்தடைதல்வேண்டும்.

வி. எல். பீ. மெண்டிஸ்,
வெளிநாட்டலுவல்கள் பணிப்பாளர் தலைமையதிபதி,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
குடியரசுக் கட்டடம், கொழும்பு—1,
1973, மாச்சு 31 ஆம் திகதி.

அட்டவணை

1. (அ) சொந்தப் பெயர் :————.

(ஆ) பிற பெயர்கள் :————.

2. (அ) பிறந்த திகதி :————.

(ஆ) 1973, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று வயது :————.

3. முகவரி :—

(அ) அலுவலக முகவரி :————.

(ஆ) சொந்த முகவரி :————.

4. தேசிய இனம் :————.

5. திருமணமானவரா அல்லவா என்பது :————.

6. திருமணமானவராயின் குழந்தைகளின் எண்ணிக்கையும் முறையே அவ்வவர் வயதுகளும் :————.

7. கல்வித் தகைமைகள்—
(அ) சிங்களம் :————.
(ஆ) ஆங்கிலம் :————.

8. பாடசாலையை விட்டு நீங்கியது தொட்டுத் தொழில் :————.

9. தற்போதைய பதவி :————.

10. பதவிக்கு நியமிக்கப்பெற்ற திகதி :————.

11. பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :————.

12. தற்போதைய ஆண்டுக்குரிய சம்பளத்துடன், சம்பள அளவுத்திட்டம்—
அடிப்படைச் சம்பளம் :————.
திரட்டிய சம்பளம் :————.

13. மோட்டார் ஊர்திகளைச் சாரத்தியஞ் செய்தலில் அனுபவம் : ————.

14. சாரத்திய உத்தரவுச்சீட்டு எண் :————. அது வழங்கப்பட்ட திகதி :————.

15. ஏதும் பிற தகைமைகள் :————.

இதன்மேற் தரப்பட்டுள்ள தகவல் சரியானது எனச் சான்றுபடுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

4-2?4—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

## புதிய செய்முறை இறப்பர் பிரிவு
### வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு ஸ்ரீ லங்காவின் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

(i) மின்சாரத்தொழில்வலர்.
(ii) பொருத்து பொறிவலர்.

2. **வயதெல்லை.**—விண்ணப்ப முடிவு தேதியன்று 35 வயதிற்குட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

3. **சம்பள விகிதம்.**—ரூபா 3,288—23×144 உம் 1×180—6,780. (தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி அவரின் அனுபவத்திற்கும் தகைமைக்கும் ஏற்றபடி சம்பள விகிதத்தில் பொருத்தமான இடத்தில் அமர்த்தப்படுவர்).

4. **கல்வித்தகைமைகள்.**—5 ம் தரம் சித்தியடைந்ததுடன் போதிய ஆங்கில அறிவு பெற்றிருத்தல் அவசியம்.

5. **அனுபவம்.**—ஆகக்குறைந்தது 10 வருட கால அனுபவமுடையவராய் இருத்தல் அவ்சியம். இதில் 2 வருடங்களை ஓர் வர்த்தகத்தாபனத்திலேனும் அல்லது நிறுவனத்திலேனும் பயிலுனராகக் கழித்திருத்தல் வேண்டும்.

6. மற்றய தொழிற் கட்டுப்பாடுகள் :—
(i) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி,
(a) அவர் செயலில் நியமிப்பதற்குமுன்னர் அவர் உடலுறுதிப்ற்றிய மருத்துவப் பரீட்சையில் சித்திபெற வேண்டும்.
(b) தகவுடைய அதிகாரியினூற் குறிக்கப்பட்ட தேர்ச்சி நிலையை அரசகரும மொழியிற் பெறல் வேண்டும்.
(c) தன் சம்பளத்தில் 6% பணிசெய்வோர் ஏற்பாட்டு நிதியத்திற்குச் செலுத்த வேண்டும். (இப்பிரிவின் உதவு தொகை 9%)
(d) இப்பிரிவின் எவ்வேலையையும் இத்தீவின் எப்பகுதியிலும் செய்ய வேண்டும்.
(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப பதவி 3 வருடங்களுக்கு தகுதிகூர் நிலையில் நியமிக்கப்படுவர்.
(iii) அரச இறப்பர் உற்பத்திக் கூட்டுத்தாபனம் நிறுவிய பின்னர் உறுதிசெய்யப்படும் இப்பதவி தற்சமயம் இடையேற்பாடானது.

7. தன் விலாசமிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையைச் சமர்ப்பித்தலின் மூலம் பெறக்கூடிய குறிப்பிட்டபடிவத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும்.

8. விண்ணப்ப முடிவு தேதி 27, சித்திரை 1973.

பணிப்பாளர்,
புதிய செய்முறை இறப்பர் பிரிவு.

127, டபிள்யூ. ஏ. டீ. இராமநாயக்கா மாவத்த,
கொழும்பு 2,
30 3.1973.

4-315—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

## இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
### சட்டத்துறை அதிகாரிப் பதவி

கூட்டுத்தாபனத்தில் சட்டத்துறை அதிகாரிப் பதவிக்கு, வழக்குரைஞர்கள் அல்லது வழக்கறிஞர்களான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் 1973 யூன் 30 ஆந் தேதியன்று 45 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

இப்பதவி, கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சேவையில் 'சி' தரத்திலானதாகும். சம்பள விகிதம்.—ரூ. 600—9×40—2×45—1050 (எல்லாமுட்பட)

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறக்கூடிய உரிய படிவத்தில் செய்யப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1973 மே 15 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் "பொது முகாமையாளர் (நிர்வாகம்) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 267, யூனியன் பிளேஸ், கொழும்பு 2" என்று விலாசமிடப்பட வேண்டும்.

பொது முகாமையாளர் (நிர்வாகம்).

4-334—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்
### மேலதிகப் பணிப்பாளர் (நிருவாகம்) பதவி

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தில் மேலதிகப் பணிப்பாளர் (நிருவாகம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. அந்நிறுவகத்தின் நிருவாகத்தினதும், நிதிகளினதும் பொறுப்பு மேலதிகப் பணிப்பாளருக்கு ஒதுக்கப்படும். அவருக்குக் கீழுள்ள நிருவாக, கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு இக்கடமைகளை அவர் கையளிப்பார்.

விண்ணப்பதாரி ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரியாகவும், உயர் பொறுப்புள்ள ஒரு நிருவாகப் பதவியில் 10 வருட அநுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். நியமனம் பெறுபவர் ரூபா 2,200—4×75—2,500 என்னும் மாத வேதனத் திட்டத்தில் அமர்த்தப்படுவர். அத்துடன் அவர் மாதம் ஒன்றிற்கு ரூபா 100 விவாகப் படியாகவும், ரூபா 250 ஐ உபசாரப்படியாகவும் பெறுவர். தலவாக்கொல்லையில் உள்ள தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தில் ஒரு தளவாடங்களைக் கொண்ட வாடகையற்ற வீடு கொடுக்கப்படும். தேயிலை ஆராய்ச்சி நிறுவக விதிகளுக்கிணங்கவே ஏற்பாட்டு நிதி நன்மைகள் இருக்கும். நியமனம் பெறுபவரதும், அவரது குடும்பத்தினரதும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவச் செலவுகளில் அரைப் பங்கு தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தினூற் செலவீடு செய்யப்படும். விண்ணப்பங்கள், தலைவர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகம், இல. 42, மெல்போன் அவெனியூ, கொழும்பு 4 என்ற முகவரிக்கு 1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

எஸ். பத்மநாதன்,
தலைவர்,
தேயிலை ஆராய்ச்சிச் சபை.

4-314—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

### கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

கீழே குறிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள கிராம சேவகர் பதவிகளுக்கு ஆண் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

| மாவட்டப் பெயர் | வெற்றிடங்களின்எண்ணிக்கை சிங்களவர் | தமிழ் |
|---|---|---|
| மாத்தளை .. .. | 1 .. | — |
| காலி .. .. | 1 .. | — |
| யாழ்ப்பாணம் .. .. | — .. | 1 |
| வவுனியா .. .. | — .. | 6 |
| மட்டக்களப்பு .. .. | — .. | 1 |
| திருக்கோணமலை .. .. | 1 .. | 1 |
| குருணகல .. .. | 1 .. | — |
| புத்தளம் .. .. | 1 .. | — |
| பொலநறுவை .. .. | 1 .. | — |
| மொனருகலை .. .. | 2 .. | — |
| இரத்தினபுரி .. .. | 8 .. | — |

குறிப்பு.—உள்ளபடியான வெற்றிடங்கள் உண்டானால் மாத்திரம் நியமனங்கள் செய்யப்படும். மேலதிக வெற்றிடங்கள் ஏற்பட்டால் அத்தகைய வெற்றிடங்களும் இவ் விண்ணப்பங்களிலிருந்து நிரப்பப்படும்.

3. சம்பளம்.—(அ) பயிற்சி ஆளாக மாதமொன்றிற்கு 50/- ரூபா படியொன்று வழங்கப்படும்.

(ஆ) கிராமசேவகராக நியமிக்கப்பட்டதும் வருடாந்தம் ரூபா 3,000/- சம்பள விதம் ஆண்டுதோறும் 90/- ரூபாச் சம்பள உயர்வுகளுடன் 5,160/- ரூபாவாக உயரும் திரட்டிய சம்பளத்தில் நியமிக்கப்படுவர். 3,810/- ரூபாவிற்கு முன்னர் வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை ஒன்று நடைபெறும்.

4. தகைமை.—(i) பரீட்சார்த்திகள் சீரிய ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும்; *அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் எல்லா நோக்கங்களின் பொருட்டு "இலங்கையர்" என்னும் சொல் வம்சாவழியாக அல்லது பதிவுவழியாக இலங்கைப் பிரசையாக இருப்பவர் எனப் பொருள்படும்.

(iii) பரீட்சார்த்திகள் ஒரு கிராமசேவகரின் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு வேண்டிய உடல் நலமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சார்த்திகள்—

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும் எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன் இரண்டு பாடங்களிலாயினும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாத ஆறு பாடங்களில் சித்திபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் வர்த்தக கணிதம், ஆரம்பகணிதம் அல்லது தூயகணிதமும் உட்பட ஆறு பாடங்களில், குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—சிங்களம் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(v) பரீட்சார்த்திகள் 1973, மே 14 ஆம் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவோ 35 வயதிற்குக் கூடியவர்களாவோ இருத்தலாகாது. அரசாங்க சேவையில் நிரந்தர நியமனங்களை உடையவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை இல்லை.

(vi) பரீட்சார்த்திகள்—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவு திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டுகாலத்தில் தாம் நியமனம் கோரும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராம சேவகரிடமிருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டுச் சொந்தக்காரர் நிரல் அல்லது தேர்தல் தொகுதி நிரல் ஆகியவற்றாலும் ஆதாரப்படுத்தப்படுவதாகவும் இருக்கலாம்;

அல்லது

(ஆ) அவர் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத்தில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். இந்த உரிமைக் கோரிக்கை அவரின் பிறப்புச் சான்றிதழின் மூலம் சான்றுபடுத்தப்படல் வேண்டும்; அல்லது

(இ) அவர் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத்தில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்குக் கல்விகற்றவராக இருத்தல் வேண்டும். இந்த உரிமைக் கோரிக்கை அவர் கல்வி கற்ற பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்களின் மூலம் நிரூபிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதால் மேற் கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் விடயத்தில் விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிடமாக பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

5. தெரிவு செய்யும் முறை :—நியமனத்திற்கான பரீட்சார்த்திகள் கீழே 7 ஆம் பந்தியில் விதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் காட்டிய செயல்திறனுடன், கீழே 6 ஆம் பந்தியில் விபரித்தவாறு சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் அல்லது தரவாரி முறையின் பேரிலான குறிப்பிடப்பட்ட உயர்தரப் பரீட்சையில் பெற்ற தரங்களின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர்.

6. தரவாரித் திட்டம்.—கீழே குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுக்கு புள்ளிகள் குறித்தொதுக்கப்படும்.

(i) சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில், 4 (iv) ஆம் பந்தியில் காட்டப்பட்ட கட்டாய பாடங்கள் உட்பட ஆறு (6) பாடங்கள் வரைக்கும் சித்தியடைந்த ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியே புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும்.

| | |
|---|---|
| விசேட சித்தி | ... 75 புள்ளிகள் |
| திறமைச் சித்தி | ... 50 டிை |
| சாதாரண சித்தி | ... 40 டிை |

அத்துடன்

(ii) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே இருக்கையில் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட இருக்கைகளில் அல்லது உ. பா. த. பரீட்சையில் நான்கு பாடங்களில்

(4) சித்தி பெற்றிருப்பின் ... 30 புள்ளிகள்

(நான்கு பாடங்களுக்குக் குறைவாகச் சித்தியடைந்திருக்கும் பரீட்சார்த்தி ஒருவர் எதுவிதப் புள்ளிக்கும் உரித்துடையாராகார்)

அல்லது

(iii) இளங்கலைஞர் பட்டம் அல்லது உயர்தரப் பட்டத்திற்கு—70 புள்ளிகள் (இது க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் பொருட்டு ஒதுக்கப்பட்ட 30 புள்ளிகளையும் உள்ளடக்கும்).

குறிப்பு.—இங்கு குறிப்பிடப்படாத ஒன்றிற்கு மேற்பட்ட பட்டம் அல்லது தகைமைகளை உடையவர்களுக்கு புள்ளிகள் குறித்தொதுக்கப்பட மாட்டாது.

7. நேர்முகப் பரீட்சை—(i) 200 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப்பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பரீட்சார்த்தியின் தோற்றம், பண்பியல்புகள், தலைமையேற்று நடத்துதற்கான தகுதிகள், நடத்தை, விவேகம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப்புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) குறைந்த அடிப்படை தகைமைகளையுடைய பரீட்சார்த்திகள் எல்லோரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதுவிடின் அது அவர் தகுதி பெற்றிராமையே காரணமாயிருக்கும்.

(iii) கீழேயுள்ள 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி கிராமசேவகராக நியமிக்கப்படுதற்கான தகுதி சம்பந்தமாக அவர் வதியும் தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து பெற்ற சான்றிதழை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற

னர் தமது பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து இச் சான்றிதழை ஏதாவது காரணத்திற்காகவேனும் பெறமுடியாத விண்ணப்பதாரர், தமது தேர்தல் தொகுதிக்கு அடுத்துள்ள தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரின் சான்றிதழ் ஒன்று பெற்றுந்தால் அது செல்லுபடியாகும்.

8. சேவை நிபந்தனைகள்.—(i) இக் கசெற்றின் பகுதி I பிரிவு II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரசாங் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

(ii) பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நியமனதாரர் அரசாங்க சேவைகாயநிதிக்கு உதவு தொகைகள் செலுத்த வேண்டும்.

(iii) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் யாவரும் குறைந்தது மூன்று மாத காலத்திற்கு (3) கிராமசேவகர் ஒருவரின் கடமைகள், தொழிற்பாடுகள் பற்றிப் பயிற்சி பெறல் வேண்டும். எல்லாப் படிகளும் உட்பட மாதம் ஒன்றிற்கு 50/- ரூபா என்ற விகிதத்தில் பயிற்சி பெறுவோருக்குக் கொடுக்கப்படும். பயிற்சிக் காலத்திற் பரீட்சார்த்திகள் விடுமுறைச் சலுகைக்கு உரித்துடையராகார்.

(iv) தமது பயிற்சியை பரீட்சார்த்தி திருப்திகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், கிராமசேவகராக நியமனஞ் செய்யப்படுவதற்கு சகல முறைகளிலும் தகுதியுடையவர் என்றும் அரசாங்க அதிபர் கருதிய பயிற்சியாளர்கள் மட்டுமே நியமிக்கப்படுவர்.

(v) கிராமசேவகருக்கான தகுதிகாண் காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும். இக்காலப் பகுதியின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தல், தாபனச் சட்டக் கோவையின் அத்தியாயம் II பிரிவு 9 இன் ஏற்பாடுகளுக்கமைய இருக்கும்.

(vi) கிராமசேவகராக நியமிக்கப்பட்ட கிராமசேவகர் ஒருவர், நிருவாக மாவட்டத்தின் எக்கிராம சேவகர் பிரிவுக்கும் இடமாற்றத்திற்குள்ளாவர்.

**9. விண்ணப்பங்கள்.**—(i) சம்பந்தப்பட்ட கச்சேரிகளில் அல்லது உதவி அரசாங்க அதிபரின் அலுவலகம் ஏதாவதிலிருந்து/பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் அலுவலகத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விதிக்கப்பட்ட படிவத்தைப் பரீட்சார்த்திகள் எவ்வகையிலும் திருத்தஞ் செய்வதற்குத் தடுக்கப்பட்டுள்ளனர். பொருத்தமான படிவத்தில் தயாரிக்கப்படாதவையும் இவ்வறித்தலில் விதிக்கப்பட்ட தேவைகளுக்குக் கண்டிப்பாக இணங்காதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) பந்தி 4 இன் கீழ் தகவுடையவர்கள், தமது விண்ணப்பங்களை அமைச்சுக்கு அனுப்பாமல் தாம் நியமனம் கோரும் மாவட்டத்தின் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபருக்கு 1973 மே மாதம் 14 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களுடைய விண்ணப்பங்களை நேரடியாக அரசாங்க அதிபருக்குக் குறிப்பிட்ட திகதியில் கிடைக்கக் கூடியதாக அனுப்பும் பொழுது விண்ணப்பத்தின் பிரதியொன்று விண்ணப்பதாரியின் திணைக்களத் தலைவருக்கூடாகவும் அனுப்புதல் வேண்டும்.

(iii) மேலே II இல் குறிப்பிடப்பட்ட திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எதுவும் நிராகரிக்கப்படும்.

(iv) விண்ணப்பங்கள் அரசாங்க அதிபருக்கு அல்லது கச்சேரியைச் சேர்ந்த உத்தியோகத்தர் எவரினதும் தனிப்பட்ட சொந்த முகவரிக்கு அனுப்பப்படலாகாது.

(v) அரசாங்க அதிபரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பம் முடிவுற்ற திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் விண்ணப்பம் கிடைத்தமை பற்றிய அறிவித்தல் பரீட்சார்த்திக்குக் கிடைக்காவிட்டால் அவர் தாமதிக்காமல் தாம் விண்ணப்பம் அனுப்பிய அரசாங்க அதிபருடன் தொடர்புகொள்ள வேண்டும்.

10. தகைமைச் சாதனங்கள்—(i) விண்ணப்பத்துடன் எவ்வகையான சாதனங்களும் அனுப்பப்படலாகாது. கோரப்பட்டவாறான படிவத்தில் தேவையான விபரங்கள் தரப்படுதல் வேண்டும். இவ்வகையில் நிறைவாக இல்லாத ஒரு விண்ணப்பம் அதன் சொந்தத் திறமைகளின் பேரில் பரிசீலனை செய்யப்படுவதோடு நிராகரிக்கவும் படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்குத் தகைமையடைந்த பரீட்சார்த்திகளிடமிருந்து தகவுத் திறனை நிரூபிப்பதற்கு சாதனச் சான்று காட்டுமாறு கேட்கப்படுவர். அத்தகைய பரீட்சார்த்திகள் அச்சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டால் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் அவசியமானவையாகும் :—

(அ) நற்பண்புச் சான்றிதழ்.

குறிப்பு.—பரீட்சார்த்தி ஒருவர் அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையில் இருப்பின் அல்லது அத்தகைய பாடசாலையில் இருந்து அண்மையில் விலகி இருப்பின், அத்தகைய பாடசாலை அதிபரிடமிருந்து நற்சான்றிதழைப் பெறுதல் வேண்டும். அவ்வாறில்லாத விடத்து அதைச் சமாதான நீதவான், வழக்குரைஞர் (அப்புக்காத்து), வழக்கறிஞர் (பிரக்கிராசியார்) அல்லது நொத்தாரிசு, பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் அல்லது ஆண்டுக்குத் திரட்டிய சம்பளமாக 4,800/- ரூபா அல்லது அதற்கு மேற்பெறும் ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாகக் கூறின், நன்கு அறியப்பட்டவரும், உடனடியாகத் தொடர்பு கொள்ளக் கூடியவருமான யாரேனுமொருவர் ஆகியவர்களில் எவராவது ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். சான்றிதழ் வழங்குபவரின் பெயர், பதவிப் பெயர், முகவரி ஆகியவை தெளிவாகக் காட்டப்படுதல் வேண்டும்.

ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள பரீட்சார்த்திகள் நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படமாட்டார். எனினும், அவர்கள் தமது வேலையும், ஒழுக்கமும் திருப்திகரமானவை என்றும், நியமிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டால், அவர்களைச் சேவை ஒப்புக்கொள்ளவிடமுடியுமென்றும், கூறுமொரு சான்றிதழைத் தமது திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவர்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவுச் சான்றிதழ் அல்லது (பிறப்புப் பதியப்படாத பரீட்சார்த்திகளின் விடயத்தில்) பதிவாளர் அதிபதியினால் வழங்கப்பட்ட வயதுச் சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பிக்க மட்டுமே முடிந்த எப்பரீட்சார்த்தியினதும் பிறந்த திகதி, அச்சான்றிதழ் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த ஆண்டின் யூலை 1 ஆம் திகதியாகக் கருதப்படும்.

குறிப்பு.—(i) பாடசாலை அல்லது கல்வி நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பெறப்பட்ட பிரித்தெடுத்த குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) சத்தியக் கடுதாசிகளோ ஞானஸ்நானச் சான்றிதழ்களோ பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iii) பிறப்புச் சான்றிதழில் காணப்படும் பெயர்/பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும் பரீட்சார்த்தி விண்ணப்பிப்பதற்குக் கொடுத்துள்ளதுமான பெயர்/பெயர்களிலிருந்து வேறுபட்டால் பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, விடயத்திற்கேற்றவாறு (110 ஆம் அத்தியாயமாம்) பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 ஆம் அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின்பிரகாரம் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை, 1957, ஓகத்து 18 ஆம் திகதிய 394 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தமது பெயர்களை மாற்றியுள்ளவர்களுமான பரீட்சார்த்திகள் திருத்தப்பட்ட பிறப்புப் பதிவேட்டிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்கப்படமாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவுச் சான்றிதழ் அல்லது வம்சாவழியினர் என்னும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கான உத்தியோக பூர்வமான மூலக் கடிதம் (ஏற்புடையவிடத்து).

(ஈ) கல்வித் தகைமை பற்றிய மூலச் சான்றிதழ் அல்லது சான்றிதழ் வழங்கப்படாதவிடத்து, பிற உத்தியோகபூர்வமான சாதனங்கள், எடுத்துக்காட்டாகத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட இலங்கை க.பொ.த. (சாதாரணதரம்) பரீட்சைப் பெறுபேற்றுக்கு அல்லது விண்ணப்பதாரரின் பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற மூலக்கடிதம்.

(உ) மேலே 4(vi) இன் கீழ் உள்ள தகைமையினை நிரூபிக்கும் சான்றிதழ்கள்.

(iv) விண்ணப்பம் செய்யும்போதே தேவையான சாதனங்கள் யாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு மதியுரை கூறப்படுகின்றது. நேர்முகப் பரீட்சையின் போது தேவையான சாதனங்களைச் சமர்ப்பிக்க முடியாதிருக்கும் அல்லது அவற்றைச் சமர்ப்பிக்கத் தாமதிக்கும் பரீட்சார்த்தியினது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**11. பொய்யான விபரங்களைக் கொடுப்பதற்குரிய தண்டனை.**—இவ் அறிவிப்பில் காட்டப்பட்டுள்ள பிரமாணங்களின்படி பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவராகக் காணப்பட்டால், தெரிவு செய்தற்கு முன்போ, தெரிவு செய்த பின்போ எந்நிலையிலாவது அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்குப் பாத்திரமாகும்.

பரீட்சார்த்தியொருவரால் கொடுக்கப்பட்ட விபரங்கள் எவை யேனும் அவரறிந்த வரையில் பொய்யெனக் காணப்பட்டால், அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால் அல்லது அவரின் சேவைக்காலத்தில் எப்பொழுதாவது அவர் விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென்று நிரூபிக்கப்பட்டால் அவர் சேவையிலிருந்து உடனே நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

12. மருத்துவப் பரிசோதனை.—நியமனத்தின் பொருட்டுத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கேற்ற உடற்தகுதி அவர்களுக்குண்டென்பதைக் காட்டுவதற்கு மருத்துவப் பரிசோதனை ஒன்றில் தேறுமாறு வேண்டப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் தவறும் பரீட்சார்த்திகள் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட மாட்டார்கள்.

13. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிராத எவ்விடயமும் அரசாங்க அதிபரின் தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படும்.

பீ. மகாதேவ்,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
ரொறிங்ரன் சதுக்கம், கொழும்பு 7,
1973, மார்ச்சு 29.

4–262—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலிஸ்தானங்கள்

சபையின் சேவையில் 8 ஆம் தரத்திலுள்ள கணக்குப் பதிபவர் பதவிகட்கு இலங்கைக் குடியரசுப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. சம்பள அளவுத் திட்டம்.—ரூபா 325—7 × ரூபா 10, 7 × ரூபா 15—ரூபா 500 மாதாந்தம் (எல்லாம் உட்பட)

3. தகைமைகள் :

(அ) வயது—1973-04-30 ஆம் தேதியன்று 20 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராயிருக்கவேண்டும்.

(ஆ) எஸ். எஸ். சி. அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்திபெய்தியிருக்க வேண்டும். இவற்றுள் எண் கணிதம்/தூய கணிதம்/வர்த்தக கணிதம் ஆகியவற்றில் ஏதேனுமொரு பாடத்தில் சித்திபெய்தியிருக்கவேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றில் கணக்குப் பதிவியல்/கணக்குப் பரிசோதனை வேலையில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவமிருத்தல் வேண்டும்,

அல்லது

பின்வரும் பரீட்சைகளில் ஒன்றிலேனும் சித்திபெய்திருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றில் கணக்குப் பதிவியல்/கணக்குப் பரிசோதனை வேலையில் ஆகக் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும்.

(அ) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் இறுதி வர்த்தகப் பரீட்சை.

(ஆ) லண்டன் கணக்குப் பதிவாளர்கள் நிலையத்தில் இறுதிப் பரீட்சை.

(இ) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் வர்த்தகப் பரீட்சையில் மூன்றும் ஆண்டு டிப்புளோமா.

(ஈ) வேறேதேனும் இதையொத்த தகைமைகள்.

4. இவ் விளம்பரத்தின் நியதிகட்கேற்பத் தகைமையுண்ட பரீட்சார்த்திகள் கணக்குப் பதிவியலிலும், வர்த்தக எண்கணிதத்திலும் எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுமாறு வேண்டப்படுவர். இப் பரீட்சைக்கு அழைத்த பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரிடமிருந்தும் 10/- ரூபாக் கட்டணங்கள் பரீட்சை மண்டபத்தில் அறவிடப்படும். பரீட்சை நிகழவிருக்கும் தேதி, நேரம், இடம் ஆகிய விவரங்கள், உரிய காலத்தில் தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும்.

5. வேலை நிபந்தனைகள்.—உடலுறுதி உள்ளவர்களென மருத்துவப் பரிசோதனையில் சித்திபெய்தினால் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் மூன்று வருட தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் :—

(அ) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண் நிலைக் காலத்துக்குள் சபையினால் விதித்த தராதர அளவிற்கு அரசாங்க மொழியில் தேர்ச்சிபெற வேண்டும்.

(இ) வேண்டப்படுமிடத்து இலங்கையின் எப்பகுதியிலேனும், சபையின் எப் பிரிவிலேனும் சேவையாற்றவேண்டும்.

(ஈ) தங்களது சம்பளத்தில் 6 சதவிகிதத்தை சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். சபை 9 சதவிகிதத்தைச் செலுத்தும்.

6. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, கொழும்பு-5, நாராகேன்பிட்டி, இருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. ஆளணி முகாமையாளருக்கு 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, இருல வீதி,
கொழும்பு-5.

### மாதிரிப் படிவம்

8 ஆம் தர கணக்குப் பதிபவர் பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) முழுப் பெயர் :————.
(ஆ) முதலெழுத்துகளுடன் பெயர் :————.
(இ) தற்போதைய முகவரி :————.
(ஈ) நிரந்தர முகவரி :————.

2. (அ) பிறந்த தேதி :————.
(ஆ) 1973-04-30 ஆம் தேதியன்று வயது :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படவேண்டும். ஞானஸ்நான சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

3. விண்ணப்பதாரர் பரீட்சையெடுக்க விரும்பும் மொழி :————.

4. கல்வித் தகைமைகள் :————.
(அ) சித்தியடைந்த ஆகக் கூடியப் பரீட்சையும் ஆண்டும் :————.
(ஆ) சித்தியடைந்த பாடங்கள் :————.

5. தேதிகளையும் பாடங்களையும் குறித்து சித்தியடைந்த கணக்குப் பதிப்வர் பரீட்சை (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :————.

6. பாடசாலை விட்டு விலகியபின் பார்த்த வேலை :————.

| வேலைகொள்வோர் | வகித்த பதவி | சேவைக் காலம் |
| --- | --- | --- |

7. கணக்குப் பதிவியல் அனுபவம் :————

8. வேறேதேனும் தகைமைகள் :————.

9. இதற்கு முன்னர் இ. போ. ச. வில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? ————.

10. சட்டநீதி மன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? அங்ஙனமாயின் விவரங்கள் தருக :————.

11. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவர்களது பெயர்களும் முகவரிகளும் :—
(1) ————.
(2) ————.

மேல் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், சரியானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவையாகவோ சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேனென்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

4-335—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

### நீர்ப்பாசனத் திணைக்களம்

### ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி

நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலை அமச்சின் கீழுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், செயலாளர், நீர்ப்பாசன, மின்சார நெடுஞ்சாலை அமைச்சு, அ. பெ. இல. 512, கொழும்பு என்னும் முகவரிக்கு, கீழ்வரும் திகதிகளிலன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படுதல் வேண்டும், விண்ணப்பத்தைக் கொண்ட காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் " ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி " எனத் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 11 மே 1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 11 மே 1973.

குறிப்பு.—(1) வெளிநாட்டிலுள்ள விண்ணப்பதாரர், விண்ணப்ப படிவங்களை விரும்பினுல் விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்குச் சமீபமாயுள்ள இல்ங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை நீர்ப்பாசன, மின்விசை, நெடுந்தெரு அமைச்சுவிற்கு அனுப்பும் பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(2) மருத்துவப் பரிசோதனையும் பயணச்செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளி நாட்டில் தெரிரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களா என்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமற்றதுமாகும். தெரிவு செய்யப்படுவோர் அரசாங்க் சேமலாப நிதிக்குப் பணம் செலுத்துமாறு கோரப்படுவர்.

3. சம்பளம்.—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூ. 7,440—10 × 360 உம் 11 × 480—ரூ. 16,320 வரையும், ரூ. 11,520 க்கு முன்னும் ரூ. 14,880 க்கு முன்னும் வினைத்திறமை காண் தடையுமுண்டு. (இது 1.10.69 க்கு முன்னிருந்த, ஆண்டொன்று ரூ. 4,800—10 × 360 உம் 10 × 480—ரூ. 13,200 வரையுமுள்ள அடிப்படைச் சம்பளத்திற்கு சமமானது).

குறிப்பு.—ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய தகைமைகள் :—

(i) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் கலாநிதிப் பட்டம், அல்லது

(ii) அதிபர் வரிசைப்பட்டம் அல்லது மண் யந்திரவியல், கொங்கிறீற் நுண்கலை, நீரியல் ஆகிய விசேட பாடங்களில் ஏதேனும் ஒன்றிலும், சம்பளத் திட்டத்தின் ரூ. 11,040 என்ற சம்பள முனையைக் கடப்பதற்கான, நீரியலில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் ஒரு வருட முழுநேரப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) மேற்கூறப்பட்டுள்ள உயர் பட்டதாரித் தகைமைகளுடன் சேவையில் சேருவோர் ரூ. 7,800 என்ற திரட்டிய வேதனத்தில் நியமனம் செய்யப்படுவர்.

4. வேண்டிய தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பத்தாரரும் சமர்ப்பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று ; அவர்

(அ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1973.5.11 ம் திகதியில் 30 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயது எல்லை கணிக்கப்படமாட்டாது) விசேட உயர் பட்டதாரிப் பட்டமுடைய விண்ண்ப்பதாரருக்கு வயது எல்லை 35 ஆகும்.

(இ) (1) அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் பின்வரும் பாடங்களாகிய கணித சாஸ்திரம், பௌதிகவியல் அல்லது ரசாயனம் ஆகியவற்றில் ஒன்றிலேனும் முதலாம் தர அல்லது இரண்டாம் தர விசேட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் எந்திரவியல் கல்விப்பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(3) அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் பொது விஞ்ஞான தாரப்பட்டம் பெற்று, அத்துடன் மேற்கூறப்பட்ட பாடங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களுடன் உதவி ஆராய்ச்சியாளராக 10 வருடங்கள் சேவை செய்துள்ள இத்திணைக்கள உத்தியோகத்தர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

5. விண்ணப்பகாரர் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற் தகைமையும் தொழிநுட்பத் தகைமையும்/ உயர் தொழிற் தகைமை அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியனவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைத் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும், எனினும் தாம் அனுப்பிய திகதியை நீர்ப்பாசன, மின்விசை, பெருந்தெரு அமைச்சுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், நீர்ப்பாசன, மின்விசை, பெருந்தெரு அமைச்சு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இவ்வமைச்சிலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

எம். சந்திரசேன,
செயலாளர்,
நீர்ப்பாசன, மின்விசை பெருந்தெரு
அமைச்சு.

நீர்ப்பாசன, மின்விசை, பெருந்தெரு அமைச்சுவின் அலுவலகம்,
த. பெ. எண். 512,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.

### இரசாயனரும் பற்றீரியவியலரும் பதவிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. நிரந்தர முகவரி :————.

3. (அ) பிறந்த திகதி :————.

(ஆ) 1973.11.5 அன்றுள்ளபடி வயது :— வருடம் :————. மாதம் :————. நாள் :————.

4. சாதியம்—

(அ) இலங்கையராயின் வம்சாவழிகாரணமாகவோ அல்லது பதிவு காரணமாகவோ ?————.

(ஆ) வம்சாவழி இலங்கையராயின் பின்வருவோர் பிறப்பிடம்—

(i) விண்ணப்பதாரி :————.

(ii) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.

(iii) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.

(iv) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் ————.

5. (அ) பால் :————.

(ஆ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா? : ————.

6. கல்வித் தகைமைகளும் உயர் தொழிற் தகைமைகளும்: ————.

7. சித்தி எய்திய உயர் பரீட்சை :————.

(1) சிங்களத்தில் :————.

(2) தமிழில் :————.

(3) ஆங்கிலத்தில் :————.

8. நீர் பணமுட்டு அற்றவரா?
பணமுட்டு உமக்கு இருப்பின் எவ்வளவிற்கு ? :————.

9. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக் காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அவ் வாறாயின் திகதிகளுடன் வழக்கு எண்களும் முழு விப ரங்களும் தருக :————.

10. தற்போதைய தொழிலும் முன்னர் வகித்த பதவியும், ஏதும் இருப்பின் விபரம் தரவும் :————.

11. வேறு ஏதும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதி யளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப் படுதற்கும், நியமிக்கப்பட்டதற்குப்பின்னராயின் எவ்வித நட்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

4-336—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55.

---

கல்வி அமைச்சு

தமிழ் மொழிப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்காக மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் தராதரப் பத்திரமற்ற உதவி ஆசிரியர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை ஆகிய கல்வி மாவட்டங் களில் உள்ள அரசினர் பாடசாலைகளில் தராதரப் பத்திரமற்ற சிங்கள உதவி ஆசிரியர் பதவிகளுக்காக அம்மாவட்டங்களில் நிரந்தர பதிவாயுள்ள ஆண், பெண் இருபாலார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் கீழ்க் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய விண்ணப்பங்களைத் தயா ரித்து, 1973 மே மாதம் 1 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தாம் பதிவாய் இருக்கும் தேர்தல் தொகுதி அமைந் துள்ள கல்வி மாவட்டத்தின் பிரதேசக் கல்வி அதிபருக்கு அல்லது பிரதான கல்வி அதிகாரிக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப் பப்படும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தமிழ் மொழிப் பாடசாலைகளில் சிங்கள உதவி ஆசிரியர் பதவிகள்" எனத் தெளிவாக்க் குறிப்பிடுதல் வேண்டும்.

2. இப்பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவும் கல்வி மாவட் டங்களுக்குப் பொறுப்பான பிரதேச கல்வி அதிபர்களின்/பிரதான கல்வி அதிகாரிகளின் விலாசங்கள் கீழே காணப்படுகின்றன.

| கல்வி மாவட்டம் | கல்வி மாவட்டத்துக்குப் பொறுப்பான அதிகாரியின் விலாசம் |
|---|---|
| மட்டக்களப்பு. | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு |
| கல்முனை. | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், கல்முனை. |
| திருகோணமலை. | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், திருகோண மலை. |

3. கடமை புரிவதற்கான நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(அ) (i) இப்பதவி நிரந்தரமானது. இளைப்பாற்றுச் சம்பள உரித்தற்றது.

(ii) நியமிக்கப்படும் நியமதாரிகள் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குக் கட்டணம் செலுத்துதல் வேண் டும்.

(iii) பரீட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும்.

(iv) அரச கரும மொழிக் கொள்கையைச் செயல்படுத்து வதற்கும் விசேடமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் சட்ட திட்டங்களை அமுல் நடத்துவதற்காகவும், தற் போது ஏற்படுத்தப்பட்டுள்ள, இதன்பின்னர் ஏற் படுத்தப்படவுள்ள நிபந்தனைகளுக்கு அமையவும் நியமதாரி ஒழுகுதல் வேண்டும்.

(v) இந்த நியமனம் அரசாங்க சேவைக் கமிசன் சபை யின் சட்ட திட்டங்களும் நிதிச் சட்டம், நிருவாக ஒழுங்கு முறைச் சட்டம், திணைக்கள நியதி எனும் கட்டளைகள் என்பனவற்றோடு அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சட்டங்கள், கட்டளைகள் ஆகியவைகளுக்கும் உட்பட்டதாகும்.

(ஆ) நியமனத்துக்காகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தாம் நியமனம் பெறும் கல்வி மாவட்டத்திலுள்ள பாடசாலைக ளுள் தம்மை நியமிக்கப்பெறும் பாடசாலையில் சேவை செய்ய வேண்டுவதோடு, எக்காரணம் கொண்டாயினும் அம்மாவட்டத்துக்கு வெளியே மாற்றங்கோருவதற்கு உரிமை கிடையாது. எனினும், ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ அல்லது திணைக்களத் தேவையைப் பொறுத்தோ ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்வதற்கு திணைக்களங்களுக்கு இருக்கும் உரிமை இதனால் பாதிக் கப்படமாட்டாது.

4. இப்பதவிக்காக விதிக்கப்பட்டுள்ள சம்பள விகிதம் வரு மாறு :—

(i) ஒன்று திரட்டிய சம்பளம்—வருடத்துக்கு—ரூபா 2,700—21×60—ரூபா 3,960.

(ரூபா 2,820 க்கும் ரூபா 3,360 க்கும் முன் தகுதிகாண் தடை)

(ii) அனுமானச் சம்பளம்—வருடத்துக்கு—ரூபா 792—21×42—1,674.

ரூபா 918 க்கும், ரூபா 1,254 க்கும் முன் தகுதிகாண் தடை)

5. தேவையான தகைமைகள்.—சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்தவராகத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) சிறந்த நல் ஒழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருப்பவராக ;

(ஆ) 1973.5.1 ஆந் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருப்பவரென ;

(இ) கீழ்க்காணப்படும் தகைமைகளோ, அல்லது அதற்குக் கூடிய கல்வித் தகைமைகளோ பெற்றிருப்பவராக.

(i) சிங்கள மொழியுடன் எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண்கணிதத்தில் சித்தியோடு, இரண்டுக்கு மேற் படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பத்திரம் பெற்றிருத்தல். (குறைந்த பட்சம் 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டுவதுடன், அவற்றுள் ஒன்று சிங்கள மொழியாதல் வேண் டும்.)

அல்லது

(ii) சிங்கள மொழியுடன் எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண்கணிதத்தில் சித்தியோடு, சிரேட்ட பாட சாலைத் தராதரப் பத்திரம் பெற்றிருத்தல். (குறைந்த பட்சம் 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டுவதுடன், அவற்றுள் ஒன்று சிங்கள மொழியாதல் வேண்டும்.)

குறிப்பு.—கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர.)ப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல் லது உயர் பரீட்சையொன்றில் தமிழ் மொழி சித்தி யடைந்துள்ளவர்களுக்கு/அல்லது தமிழ் மொழியில் மிகவும் சிறந்த அறிவு பெற்றவர்களுக்கு இங்கே முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(ஈ) தமது பதிவைக் காட்டியிருக்கும் தேர்தல் தொகுதியில் தாம் நிரந்தரவதிவாளர் என்பதைக் கீழ்க்காணப்படும் ஏதாவது ஒரு முறையில் நிரூபிப்பதற்கு விண்ணப்பதாரி தயாராய் இருத்தல் வேண்டும்.

(i) குறித்த தேர்தல் தொகுதியில் பிறந்தவர் என்பதை நிரூபிக்கத் தமது பிறப்புச் சாட்சிப் பத்திரத் தைக் காட்டுவதன் மூலம் ;

(ii) தேர்தல் தொகுதி அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் இருந்து கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றி உள்ளார் என்பது.

(சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தை அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம்) ;

(iii) குறித்த தேர்தல் தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் என்பது. (வாக்காளர் அட்டவணையின் உறுதிப்படுத்தப்பட்ட பகுதிப் பிரதியைச் சமர்ப்பிப்பதன் மூலம்) ;

(iv) விண்ணப்பதாரியும் அவரின் பெற்றோர்களும் குறித்த தேர்தல் தொகுதியில் நிரந்தர வதிவாளராக இருப்பதோடு, கடந்த மூன்று வருடங்கள் பதிவாளர்களாக இருக்கிறார்கள் என்பதை ருசுப்படுத்த குடியிருப்பாளர் அட்டவணையைக் காட்டுவதன் மூலம் ;

(உ) விண்ணப்பதாரிகள் கீழ்க்காணப்படும் சாதனங்களின் நகல் பிரதிகளைத் (அசல் பிரதிகளையன்று) தத்தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ii) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(iii) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

குறிப்பு.—மேற்குறித்த சாதனங்களின் பிரதிகளை (நகல்) இணைத்தனுப்பத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. விண்ணப்பங்களும் அவை தொடர்பான ஏனைய சாதனங்களும் இவ்வறிவித்தலின் முதலாம் பந்திக்கு அமைய அனுப்பப்படுவதோடு, இவ்வமைச்சின் அல்லது திணைக்களத்தின் எந்த ஒரு உத்தியோகத்தரின் பெயருக்காயினும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகாது.

7. இவ்வர்த்தமானியின் முதலாம் பகுதி இரண்டாம் பந்தியின் ஆரம்பத்தில் காணப்படும் அரசினர் சேவைகளுக்கான நியமனங்களுக்கு அமையும் பொது நிபந்தனைகள் கவனிக்கற்பாலன.

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. அஞ்சலில் ஏற்படக்கூடிய எத்தகைய தாமதத்தையும் தவிர்க்குமுகமாக விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பீ. உடகம,
கல்வி அமைச்சின் செயலாளரும்,
கல்வி மா அதிபரும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ஆம் ஆண்டு மார்ச் மீ 28 ஆந் உ.

**தமிழ் மொழிப் பாடசாலைகளில் சிங்களம் கற்பித்தற்காக மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் தராதரப் பத்திரமற்ற உதவியாசிரியர் பதவிகள்**

விண்ணப்பிக்கும் கல்வி மாவட்டம் :————.

1. குடும்பப் பெயர் முதலில் வரக்கூடியதாக முழுப்பெயர் : ————.

(தெளிவாக எழுதவும்)

2. (i) நிரந்தர விலாசம் :————.
(ii) தேர்தல் தொகுதி :————.

3. நிரந்தர உரித்துடைய தேர்தல் தொகுதி :————.
(வர்த்தமானி அறிவித்தலின் 5(ஈ) பகுதிக்கு அமைய)

4. ஆணா/பெண்ணா ? :————.

5. விண்ணப்பதாரி க. பொ. த (சாதாரண தர)ப் பரீட்சைக்கு அல்லது சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றிய (இறுதியாகப்படித்த) பாடசாலை: ————.

6. விவாகஞ் செய்தவரா/செய்யாதவரா ? :————.

7. பிறந்த திகதியும் இடமும் :————.

8. 1973.5.1 ஆந் திகதிக்கு வயது :————.

9. (i) விண்ணப்பதாரியின் தகப்பனார் பிறந்த இடம் :————.
(ii) விண்ணப்பதாரியின் தாயார் பிறந்த இடம் :————.

10. சாதியம் :————.

11. இலங்கையராயின் வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா :————.

12. தகைமைகள் :—

(1) சி. பா. த/க. பொ. த. (சாதாரண தரம்) :————.

| | வருடமும் மாதமும் | பரீட்சை இலக்கம் | பாடங்கள் | பெற்றுள்ள சித்தித் தரங்கள் (பொருத்தமான பகுதியில் "✓" அடையாளம் இடுக) | | | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | விசேடம் | திறமை | சாதாரணம் | |
| முதலாம் முறை | | | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | | | | |
| இரண்டாம் முறை | | | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | | | | |

(2) க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சை :—

| வருடமும் மாதமும் | பரீட்சை இலக்கம் | பாடங்கள் | பெற்றுள்ள சித்தித் தரங்கள் (பொருத்தமான பகுதியில் "✓" அடையாளம் இடுக) | | | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|---|---|---|---|
| | | | விசேடம் | திறமை | சாதாரணம் | |
| | | 1.<br>2.<br>3.<br>4. | | | | |

13. விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவகராக இருப்பின் அது சம்பந்தமான விபரங்களைத் தருக :—.

(1) திணைக்களத்தின் பெயர் :————.

(2) வகித்த பதவியும், அப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்துடனுனதுமா என்பது பற்றிய விபரம் :————.

(3) நியமனம் பெற்ற திகதி :————.

(4) விலகிய திகதியும், விலகியதற்கான காரணமும் : ————.

(5) ஆசிரியராயின் பதிவிலக்கமும், கடைசியாகக் கடமையாற்றிய பாடசாலையும் :————.

14. விசேட உரிமைகள், தகைமைகள் அல்லது அனுபவங்கள் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் :————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமெனத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படவில்லை அல்லது அனுதாபத்துக்குரிய முரண்பாடெனச் செயற்திறமையின்மையின் பேரில் பதவியிலிருந்து இளைப்பாற்றப்படவில்லை என்றும் பதவி துறந்தவனெனக் கருதப்படவில்லையென்றும், யான் வம்சாவழி காரணமாக/பதிவு காரணமாக இலங்கைப் பிரசை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு அடங்கியுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவரின் நியமனம் பெறத் தகுதியற்றவனுக்கப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

(விண்ணப்பதாரி அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது கூட்டுத்தாபனமொன்றில் கடமை புரிபவராக இருப்பின், குறித்த திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஊடாகத் தமது விண்ணப்பத்தினை அனுப்புதல் வேண்டும்.)

.................................................. யின் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கிறேன். இங்கு புரியும் சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்.

————,
திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் பெற்றவரின் கையொப்பம்.

பதவி :————.

விலாசம் :————.

திகதி :————.

4-341—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55.

---

## வடக்கு ஓத்தா பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிக்கான பதவி

புத்தளம் மாவட்டத்தில் வென்னப்புவ காரியாதிகாரியின் பிரிவில் வடக்கு ஓத்தா பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. கீழ் உள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 30.05.1973 பி. ப. 12.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ எனக்குக் கிடைத்தல் வேண்டும்.

ஆட்சியெல்லையின் பகுதி

| | |
|---|---|
| 1. 462/63 விகிரியாகம | கிராமசேவகர் பிரிவுகள் |
| 2. 464 பொத்துவட்டவன | |
| 3. 465 துவாவல | |
| 4. 466ஏ கிழக்கு கிரிமெற்றியாவ | |
| 5. 467 லனுவில | |
| 6. 476 வன்டிரிப்பு | |
| 7. 466 மேற்கு கிரிமெற்றியாவ | |
| 8. 468 ஹால்தண்டுவன | |

2. இப்பதவிக்கு குறிக்கப்பட்ட சம்பளம் கொடுபடமாட்டாது. ஒவ்வொரு விசாரணைக்கும் ரூபா 7.50 கொடுக்கப்படும்.

3. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் தகைமைகள் உடையவரென திருப்திகரமாக நிரூபித்தல் வேண்டும் :—

(அ) 1973.05.30 ல் வயது 30 க்குக் குறையாதவராகவும் 60 க்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நற்குணமுடையவராகவும் உடல்நலம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) இப்பகுதியில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வருபவற்றில் ஒரு பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும் :—

(i) 1925 ம் ஆண்டு தொடக்கம் 1944 ஆண்டு வரைக்கும் நடைபெற்ற சுயபாஷைப் பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரம் அல்லது சிங்களம் அல்லது தமிழை ஒரு பாடமாகக் கொண்ட ஆங்கில பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரம் அல்லது சிங்களம்/தமிழ் ஒரு பாடமாகவுள்ள சிங்களம்/தமிழ்/ஆங்கில கனிஷ்ட தராதரப் பத்திரம்.

(ii) இதே போன்ற ஒரு பரீட்சை அல்லது உயர்வான பரீட்சை.

4. அபேட்சகர்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் பத்திரங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம்.

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணத்தை அத்தாட்சிப்படுத்தக் கூடிய இரண்டு சமீபத்திய நற்சாட்சிப் பத்திரங்கள். இவற்றில் ஒன்று கிராமசேவகரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரரின் நிரந்தர வசிப்பிடம்பற்றிய கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரம்.

5. அரசாங்க ஊழியர்கள் கூட்டுத்தாபனத் தொழிலாளர்கள் உள்ளூராட்சிச் சபைகளின் அங்கத்தவர்கள் ஆகியோர் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாக நியமனம் பெறத் தகுதியுள்ளவர்களாவர்.

6. விண்ணப்பம் கிடைத்ததுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

பி. ஜீ. புஞ்சிஹேவா,
அரசாங்க அதிபர், புத்தளம்.

கச்சேரி,
புத்தளம்,
30.03.73.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

திடீர் மரண விசாரணை அதிகாரி பதவி..........................

(1) விண்ணப்பதாரரின் பெயரும் முழு விலாசமும் :————. (பெரிய எழுத்தில்)

(2) நிரந்தர வசிப்பிடமும் வசித்த காலமும் :————.

(3) 30 05.1973 ல் சரியான வயது :—
வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் : ————.

பிறந்த திகதியும் பிறப்பிடமும் :————.

(4) விவாகமானவரா விவாகமாகாதவரா ? :————.

(5) கல்வித் தகைமைகள் :————.

(6) தற்போதைய தொழில் :————.

(7) பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்பட்டதுண்டா ? அவ்வாறாயின் விபரங்கள் தருக :————.

(8) விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவுகளும் பெறுமதியும் :————.

(9) விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவரா ? ஆமெனில் விபரங்கள் தருக : ————.

(10) இப்பதவிக்கான வேறு ஏதாவது விசேட தகைமைகளின் விபரங்கள் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதில் கொடுக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றனவையாகவோ காணப்பட்டால், தெரிவுக்கு முன்னர் இத்தவறு கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

4-338—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55.

**அம்பாரை மாவட்டத்தில் அக்கரைப்பற்றுப் பிரிவில் அட்டாளைச்சேனை தெற்குப் பகுதிக்கு முஸ்லீம் விவாகப் பதிவுகாரர் பதவி**

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோருதல் தொடர்பாக 24 ம் இலக்க 8.9.72 ந் திகதியுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சோமசிறி முனசிங்க,
மேலதிக மாவட்டப் பதிவாளர்.
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
அம்பாரை, 14.3.73.

4-265—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55.

---

**அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றுப் பிரிவில் அட்டாளைச்சேனை 3 ம் அல்லது 4 ம் குறிச்சியில் காரியாலயம் அமைக்கும் முஸ்லீம் விவாகப் பதிவாளர் பதவி**

அக்கரைப்பற்றுப் பிரிவுக்கு முஸ்லீம் விவாகப் பதிவாளர் பதவிக்கு அட்டாளைச்சேனை 3 ம் 4 ம் குறிச்சிப் பகுதிக்குள் நிரந்தரமாகக் குடியிருக்கும் விவாகமான ஆண் முஸ்லீம்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

2, இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங் தரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், குறிப்பிட்ட பகுதியை உள்ளடக்கும் காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராமசேவையாளர் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவல்கங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிசு நிலையம், சனசமூக நிலையங்களிலும் ஏனைய பகிரங்க நிலையங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிற அறிவித்தல்களில் அடங்கி உள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படுவதோடு 1973 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

சோமசிறி முனசிங்க,
மேலதிக மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
அம்பாறை, 73.03.29.

4-284—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55.

---

**கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு (மருதானை) பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி**

மருதானை பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கக்கூடியவர்கள் ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதுக்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலீஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும், பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பபத்திரத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு மே மாதம் 12 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

எம். பி. திசனாயக்க,
மேலதிக மாவட்டப் பதிவாளர்.

கொழும்பு மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1973, ஏப்பிறல் 02 ந் திகதி.

4-207—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55.

---

இல. வெ. மு./4/150

**கல்வி அமைச்சு**

பொதுநலவாசு மருத்துவ இணையுரிமைப் பரிசில்கள்

பொதுநலவாசு புலமைப் பரிசில், இணையுரிமைப் பரிசில் திட்டத்தின் கீழ் ஐக்கிய இராச்சியத்திலுள்ள உயர் கல்வி நிலையங்களில் 1973 ஆம் ஆண்டு கழகவாண்டு தொடக்கம் செல்லுபடியான மருத்துவ இணையுரிமைப் பரிசில்களை வழங்குதற் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திருப்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு.—(1) புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமைபுரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(2) சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிப்வர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

2. கால எல்லை.—இணையுரிமைப் பரிசில்கள் சாதாரணமாக ஒரு வருட கால அளவினதாகும்;

எனினும், துர்நடத்தை, வாவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஐக்கிய இராச்சிய அதிகாரிகளின். தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1973.9.1 அன்று 42 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) ஏற்கனவே பட்டப்பின் தகைமை பெற்றுள்ள மருத்துவ ஆசிரியர்களாகவேனும் பிணியாய் நிலையாளர்களாகவேனும் ஆனல் தமது சேவையைக் கூடிய பலனளிக்கக்கூடியதாக்கும் பொருட்டு முழுமையாக்கப்பட்ட ஒரு கற்கை நெறி அல்லது பயிற்சி வேண்டியவராய் இருக்க வேண்டும். ஆராய்ச்சியாளர்கள், அடிப்படை மருத்துவ விஞ்ஞான ஆசிரியர்கள், மருத்துவ நிருவாகிகள் ஆகியோரும் உரித்துடையவராவர்.

(iv) ஆங்கிலத்தில் உயர்தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.73 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

4. அளிப்பு நிபந்தனைகள்.—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க் காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(i) வருடாந்தம் 1720 பவுண் வீதம் சொந்தத் தாபரிப்புக்கான சகாயப்படி.

(ii) பிரித்தானியாவுக்குப் போதற்கும் இணையுரிமைப் பரிசில் முடிந்த பின் திரும்புதற்கும் (வெகுமதிகள் பெறுமுன் செய்யப்படும் பிரயாணங்களின் செலவு மீளக்கொடுபடாது).

(iii) அங்கீகரிக்கப்பட்ட கற்கை, ஆய்கூடக் கட்டணங்கள்.

(iv) புத்தகங்களுக்கும் உபகரணங்களுக்கும் கொடையாக வருடாந்தம் 45 பவுண்.

(v) பிரித்தானியாவுக்குள் அங்கீகரிக்கப்பட்ட பிரயாணச் செலவுக்கென வருடாந்தம் 25 பவுண் வரையான நன்கொடை.

(vi) அயனமண்டல நாடுகளிலிருந்து வரும் இணையுரிமைப் பரிசில் பெறுவோருக்கு அவர்கள் பெறுதற்குச் சிபார்சு செய்யப்படுதற்கமைய, உடைகள் வாங்குதற்கான நன்கொடையாக 55 பவுண்.

(vii) மனைவிமாருடன் செல்பவர்களுக்கு விவாகச் சகாயப்படியாக மாதாந்தம் 32 பவுணும் அவர்களுடன் பிரித்தானியாவில் வாழும் 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு முதலாவது, இரண்டாவது, மூன்றுவது பிள்ளைக்கு மாதாந்தம் முறையே 7 பவுண், 5 பவுண், 4 பவுண் வீதம் சகாயப்படியும். யாதேனும் புலமைப் பரிசில் பெற்றுள்ள அல்லது சம்பளம் பெறும் உத்தியோகத்திலுள்ள மனைவி ஒருவரைப் பொறுத்தவரையில் விவாகச் சகாயப்படி வழங்கப்படமாட்டாது ; வெகுமதி அளிக்கப்படும் நேரத்தில் விவாகமாகியிருப்பின் மட்டுமே சகாயப்படி வழங்கப்படும்.

(இச்சகாயப்படிகள் மீது ஐக்கிய இராச்சிய வருமான வரிகள் விதிக்கப்படமாட்டா).

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. நேர்முகப் பரீட்சை.—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப்பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. உடன்படிக்கை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்— அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப் படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. வைத்தியப் பரீட்சை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஐக்கிய இராச்சியத்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்தியப் பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேசகற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையாராகார். ஏனையோரைப் பொறுத்த வரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.4.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தமது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973.4.4.

4-340—11.40.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கடற்றொழில் திணைக்களம்

### நீர்கொழும்பு, தங்காலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் 1973 ஆம் ஆண்டு ஜூலையில் சிங்களம்/தமிழ் மொழியில் நடாத்தப்படவிருக்கும் பழுதுபார்க்கும் இயந்திர வினைஞர் பயிற்சி வகுப்புகள்

மேற்கூறப்பட்ட கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் 1973 ஜூலையில் தொடங்கவிருக்கும் பழுதுபார்க்கும் இயந்திர வினைஞர் பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளையுமுடைய தகுந்த அபேட்சகர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

நீர்கொழும்பு, தங்காலை ஆகிய இடங்களிலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையத்தில் போதனுமொழி சிங்களமாகவும் யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையத்தில் போதனுமொழி தமிழாகவும் இருக்கும்.

2. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை கீழ் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்து தாம் தெரிவு செய்துள்ள பயிற்சி நிலையத்தின் அதிபருக்கு 1973 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். தபாலில் அல்லது வேறு விதமாகக் காணமற்போகும் விண்ணப்பங்களுக்கு இத்திணைக்களம் பொறுப்பாளியல்ல. கடற்றொழில் பயிற்சி நிலைய அதிபர்களின் முகவரிகள் பின்வருமாறு :—

(அ) அதிபர், கடற்றொழில் பயிற்சி நிலையம், நீர்கொழும்பு.

(ஆ) அதிபர், கடற்றொழில் பயிற்சி நிலையம், தங்காலை.

(இ) அதிபர், கடற்றொழில் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம்.

3. பயிற்சி காலமும் விரிவும்.—இப்பயிற்சி வகுப்புகள் கோட்பாடு தத்துவங்கள், இயந்திரத்தை செயலாற்றுதல், பேணுதல், கடலக என்ஜின்களை பழுதுபார்த்தலும், சுத்திசெய்தலும் என்பனவற்றையிட்ட பயிற்சியை அடக்கும். இப்பயிற்சி வகுப்புகள் கிட்டத்தட்ட 6 மாத காலத்துக்கு நீடிக்கும், ஒவ்வொரு வகுப்பிலும் 10 பேருக்கு இடமளிக்கப்படும்.

4. பயிற்சி நிபந்தனைகள்

(1) பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு தங்கு வசதிகள் அளிக்கப்படமாட்டா.

(2) பயிற்சி முடிந்ததும், பயிற்சி பெற்றவர் அரசாங்கத்தின் கீழ் தொழில் ஏதுக்கேனும் எதுவித உரிமையையும் கோரமுடியாதவராவர்.

(3) பயிற்சி வகுப்புகளின் கால எல்லைவரையும், பயிற்சி பெறுவோர் நிலைய விதிகளுக்கு அமைந்து நடக்க வேண்டியவர்களாவார்.

(4) பயிற்சியாளர்களிடமிருந்து பயிற்சிக்குக் கட்டணமேதும் அறவிடப்படமாட்டாது.

(5) பயிற்சி பெறுவோருக்கு நாளொன்றுக்கு ரூபா 2/- வீதம் உணவுப்படி வழங்கப்படும்.

(6) தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் ரூபா 50/-ஐ வைப்புப் பணமாக செலுத்தவேண்டும். பயிற்சி முடிவடைந்ததும் இப்பணம் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

5. தேவையான தகைமைகள்.—இப்பயிற்சிக்கான விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும்—

(அ) 1973 ஆம் ஆண்டு மே மாதம் 31 ந் தேதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும்,

(ஆ) நல்லொழுக்கமும், நல்ல உடற்றிறன் உடையவராகவும்,

(இ) ஒரு ஊர்திச்சாலையில் அல்லது வேலைக்களத்தில் 3 வருடகாலம் பொறித்துறையில் நடைமுறை அனுபவம் பெற்றவராகவும்,

(ஈ) சி. ப. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரண) பரீட்சையில் எண் கணிதம்/தூய கணிதம் உட்பட 4 பாடங்களில் சித்தி பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பதாரர், பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலச் சான்றிதழ்களை அல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்க வேண்டும்.—

(அ) பிறப்பு பதிவுச் சான்றிதழ்.

(ஆ) தாம் பெற்ற ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரரினதும் அன்னார் தந்தையினதும் தொழிலைக் குறித்து, கிராம சேவகரிடமிருந்து ஒரு அத்தாட்சிப் பத்திரம்.

(உ) விண்ணப்பதாரர், பெற்றுள்ள இயந்திர வினைஞர் பயிற்சியைக் குறிக்கும் சான்றிதழ்.

7. அபேட்சகர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குப் பிரசன்னமாகத் தயாராயிருக்கவேண்டும். இது சம்பந்தமாகப் பிரயாணச் செலவோ அல்லது வேறு செலவுகள் ஏதுவுமோ வழங்கப்படமாட்டாது.

இவ்வகுப்புகளில் சேர்வதற்கு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுக்கு கருப்புகள் ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3, 1973-03-30.

### பழுதுபார்க்கும் இயந்திர வினைஞர் பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பப்படிவம்

1. முழுப்பெயர் :————.

(அ) முதற் பெயர் :————.

(ஆ) ஏனைய பெயர்கள் :————.

2. தபால் முகவரி :————.

3. (அ) 1973 ஆம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதியில் சரியான வயது :—
வருடங்கள்————, மாதங்கள்————, தினங்கள்————.

(ஆ) பிறந்த திகதி :————.

4. நாட்டினம் :————.

5. விண்ணப்பதாரரின் தற்போதைய தொழில் :————.

6. விண்ணப்பதாரர் தொழில் செய்யுமிடம் :————.

7. விண்ணப்பதாரர் விவாகமானவரா, விவாகமாகாதவரா அல்லது தாரமிழந்தவரா ? :————.
(விவாகமானவராயின் பிள்ளைகளின் தொகையைத் தருக)

8. கல்வித் தராதரம் :————.

9. விண்ணப்பதாரர் பெற்றுள்ள இயந்திர வினைஞர் பயிற்சிகள் பற்றிய விபரங்கள் :————.

10. இப்பயிற்சிக்கு உரிமை கோரும் விசேட காரணங்களின் விபரங்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

4-258/1—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55.

---

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை—ஏப்ரல் 1974

### விதிக்கப்பட்ட பாட நூல்கள்

1974 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் மேற்படி பரீட்சையின் சிங்களம், தமிழ், ஆங்கிலம், பாளி, சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம், கிரேக்க ரோமன் நாகரிகம் சார்பான வினுத்தாள்கள் 1973 ம் 1974 ம் ஆண்டுகளுக்கு விதிக்கப்பட்ட பாடநூல்களிலிருந்தும் (எஸ். ஜீ. 101 உம் 2/12/1971 ம் திகதியுடைய IV ம் அனுபந்தமும்) 1971 ம் 1972 ம் ஆண்டுகளுக்கு விதிக்கப்பட்ட பாட நூல்களிலிருந்தும் (எஸ். ஜீ./71/69 உம் 68.12.02 ம் திகதியுடைய IV ம் அனுபந்தமும்) தயாரிக்கப்படும் என்று எல்லாப் பாடசாலைத் தலைவர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இத்தால் அறிவிக்கப்படுகிறார்கள்.

ஏ. டபிள்யூ. எஸ். குணசேகர,
பரீட்சை ஆணையாளருக்காக.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2,
1973.03.14.

4-259—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55.

### கடற்றொழில் திணைக்களம்

### நீர்கொழும்பு, தங்காலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையங்களில், 1973 ஆம் ஆண்டு ஜூலையில் சிங்களம்/தமிழ் மொழியில் நடாத்தப்படவிருக்கும் கடற்றொழிலாளர் பயிற்சி வகுப்புகள்

மேற்கூறப்பட்ட கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் 1973 ஜூலையில் தொடங்கவிருக்கும் கடற்றொழிலாளர் பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய தகுந்த அபேட்சகர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

நீர்கொழும்பு, தங்காலை ஆகிய இடங்களிலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் போதனுமொழி சிங்களமாகவும், யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையத்தில் போதனுமொழி தமிழாகவும் இருக்கும்.

2. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை கீழ் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்து தாம் தெரிவு செய்துள்ள பயிற்சி நிலையத்தின் அதிபருக்கு 1973 மே 31 ஆம் திகதியன்றே அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். தபாலில் அல்லது வேறுவிதமாக காணுமற்போகும் விண்ணப்பங்களுக்கு இத்திணைக்களம் பொறுப்பாளியல்ல. கடற்றொழில் பயிற்சி நிலைய அதிபர்களின் முகவரிகள் பின்வருமாறு :—

(அ) அதிபர், கடற்றொழில் பயிற்சி நிலையம், நீர்கொழும்பு.
(ஆ) அதிபர், கடற்றொழில் பயிற்சி நிலையம், தங்காலை.
(இ) அதிபர், கடற்றொழில் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம்.

3. **பயிற்சிக் காலமும் விரிவும்.**—இப்பயிற்சி வகுப்புகள், மீன்பிடிக் கருவி, மீன்பிடி முறை, இயந்திரத்தைச் செயலாற்றுதல், பேணுதல் என்பவற்றையிட்ட பயிற்சியை அடக்கும். இப்பயிற்சி வகுப்புகள் கிட்டத்தட்ட 6 மாத காலத்துக்கு நீடிக்கும். ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேருக்கு இடமளிக்கப்படும்.

4. **பயிற்சி நிபந்தனைகள்**

(1) பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு தங்கு வசதிகள் வழங்கப்படமாட்டா.

(2) பயிற்சி முடிந்ததும், பயிற்சி பெற்றவர் அரசாங்கத்தின் கீழ் தொழில் ஏதுக்கேனும் எதுவித உரிமையையும் கோர முடியாதவராவர்.

(3) பயிற்சி வகுப்புகளின் காலஎல்லை வரையும், பயிற்சி பெறுவோர் நிலைய விதிகளுக்கு அமைந்து நடக்க வேண்டியவர்களாவர்.

(4) பயிற்சியாளர்களிடமிருந்து பயிற்சிக்கு கட்டணமேதும் அறவிடப்படமாட்டாது.

(5) நிலையத்துக்குரிய பயிற்சி வள்ளங்களில் கடலில் செயல்முறையிற் செய்து காட்டுவதையும் பயிற்சியடக்கும்.

(6) பயிற்சி பெறுவோருக்கு நாளொன்றுக்கு ரூபா 2/- வீதம் உணவுப்படி வழங்கப்படும்.

(7) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ரூபா 50/- வைப்புப் பணமாகச் செலுத்தவேண்டும். பயிற்சி முடிவடைந்ததும் இப்பணம் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

5. **தேவையான தாரதாரங்கள்.—(1) இப்பயிற்சிக்கான விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும்—**

(அ) 1973 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று 18 வயதுககுக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும்,

(ஆ) நலெல்லாழுக்கமும், நல்ல உடற்றிறன் உடையவராகவும்,

(இ) சிங்களம்/தமிழ் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைவரையும் படித்தவராயும் இருக்கவேண்டும்.

குறிப்பு.—ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடியைக் கொண்டோரும் அவர்களின் ஆண்மக்களுமான அபேட்சகருக்கு முதன்மை அளிக்கப்படும்.

(2) விண்ணப்பதாரர், பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலச் சான்றிதழ்களை அல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்பு பதிவுச் சான்றிதழ்.

(ஆ) தாம்பெற்ற ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரரினதும் அன்னார் தந்தையினதும் தொழில்களைக் குறித்து, கிராம சேவகரிடமிருந்து ஒரு அத்தாட்சிப் பத்திரம்.

6. அபேட்சகர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு பிரசன்னமாகத் தயாராயிருக்கவேண்டும், இது சம்பந்தமாக பிரயாணச் செலவோ அல்லது வேறு செலவுகள் எதுவுமோ வழங்கப்படமாட்டாது.

7. இவ்வகுப்புகளில் சேர்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3, 1973.03.30.

### கடற்றொழிலாளர் பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பப் படிவம் சிங்களம்/தமிழ் மொழியில்—ஜூலை 1973

1. முழுப்பெயர் :————.

(அ) முதற்பெயர் :————.

(ஆ) ஏனைய பெயர்கள் :————.

2. தபால் முகவரி :————.

3. (அ) 1973 ஆம் ஆண்டு மே மாதம் 31 ந் தேதியில் சரியான வயது :—

வருடங்கள் ......... மாதங்கள் ......... தினங்கள் .........

(ஆ) பிறந்த திகதி :————.

4. நாட்டினம் :————.

5. விண்ணப்பதாரின் தற்போதைய தொழில் :————.

6. விண்ணப்பதாரர் தொழில் செய்யுமிடம் :————.

7. விண்ணப்பதாரர் மீனவராயிருந்தால் :—

(அ) மீன்பிடி ரகம் :————.

(ஆ) வள்ளத்தினதும் அல்லது கருவியினதும் சொந்தக்காரனு :————.

(இ) ஒரு இயந்திர வள்ளத்தின் சொந்தக்காரனு :————.

8. விண்ணப்பதாரரின் தந்தையின் தற்போதய தொழில் :————

9. விண்ணப்பதாரரின் தந்தை தொழில் செய்யுமிடம் :————.

10. விண்ணப்பதாரர் விவாகமானவரா, விவாகமாகாதவரா அல்லது தாரமிழந்தவரா ? (விவாகமானவராயின் பிள்ளைகளின் தொகையைத் தருக) :————.

11. கல்வித் தராதரம் :————.

12. ஏற்கனவே பெற்றுள்ள பயிற்சி ஏதாவதினது விபரங்கள் : :————.

13. இப்பயிற்சிக்கு உரிமைகோரும் விசேட காரணங்களின் விபரங்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

3-258/2—11.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 55

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும் வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** .. | **6.4.73** | **வெள்ளி** .. | **28. 3.73** | **புதன்** .. | **ந. ப. 12.00** |
| | **11.4.73** | **புதன்** .. | **4. 4.73** | **புதன்** .. | **ந. ப. 12.00** |
| | **19.4.73** | **வியாழன்** .. | **11. 4.73** | **புதன்** .. | **ந. ப. 12.00** |
| | **27.4.73** | **வெள்ளி** .. | **18. 4.73** | **புதன்** .. | **ந. ப. 12.00** |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.